**Source**: Tamil Murasu, Page 2
**Date**: 3 May 2022

NUHS
National University
Health System

# மார்பகப் புற்றுநோய்க்கு வலியில்லா காந்த சிகிச்சை: பல்கலைக்கழக வல்லுநர்கள் கண்டுபிடிப்பு

மார்பகப் புற்றுநோய் அணுக்களைக் கொல்வதற்கு புதிய வழி ஒன்றை சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிவியல் வல்லுநர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

புற்றுநோய் அணுக்களைக் காந்தப் புலங்களுக்கு உட்படுத்தி வலியில்லாமல் அவற்றைக் கொல்வது புதிய காந்தத் தொழில்நுட்ப சிகிச்சை மூலம் சாத்தியமாகிறது.

வருங்காலத்தில் வேதி சிகிச்சைக்கான மருந்து அளவைத் தங்களுடைய சிகிச்சை முறை குறைத்துவிடும் என்று அந்த வல்லுநர்கள் நம்புகிறார்கள்.

ஆகையால், நோயாளிகளிடம் ஏற்படக்கூடிய வேண்டாத விளைவுகளும் குறைந்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டது.

புதிய சிகிச்சை தொழில்நுட்பம், காந்த அதிர்வுகளைப் பயன்படுத்தி புற்றுநோய் அணுக்களில் சுவாசத்தைத் தூண்டிவிடுகிறது. இதன் மூலம் அந்த உயிரணுக்களில் புரதத்தின் அளவு அதிகரிக்கிறது.

காந்தப் புலங்களுக்கு உட்படும்போது அத்தகைய உயிரணுக்கள் கடைசியில் மாண்டுவிடுகின்றன.

இந்தக் காந்த சிகிச்சை, புற்றுநோய் உயிரணுக்களை மட்டுமே குறிவைக்கிறது என்பது முன் மருந்தகப் பரிசோதனைகள் மூலம் தெரியவந்து இருக்கிறது.

புற்றுநோய்க்கு அளிக்கப்படும் வேதி சிகிச்சை, நல்ல ஆரோக்கியமான உயிரணுக்களையும் சேதப்படுத்திவிடும்.

ரத்தம் வழியாக வேதி சிகிச்சை மருந்துகள் போக முடியாத புற்றுநோய் உயிரணுக்களையும் காந்த அதிர்வுகள் குறிவைத்து அழித்துவிடும் என்று இணைப் பேராசிரியர் ஆல்ஃபிரிடோ பிராங்கோ-ஓப்ரிகான் தெரிவித்தார்.

இவர், இந்தப் பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் புத்தாக்கத் தொழில்நுட்பப் பயிலகத்தைச் சேர்ந்தவர்.

பேராசிரியர் ஆல்ஃபிரிடோ, காந்தத் தொழில்நுட்பச் சிகிச்சையை கண்டறியும் குழுவுக்குத் தலைமை வகித்தவர்.

இவர்கள் உருவாக்கி இருக்கும் சிகிச்சை சாதனம் காந்த அதிர்வுகளை உருவாக்குகிறது. அந்த அதிர்வுகள் மார்பகப் புற்றுநோய் உயிரணுக்களை கொல்லுகின்றன.

காந்த சிகிச்சையின்போது படுக்கையில் நோயாளி குப்புறப் படுத்து இருப்பார். அந்தப் படுக்கையில் அவரின் மார்புப் பகுதி இருக்கும் இடத்தில் ஒரு திறப்பு இருக்கும்.

குறுகிய வெற்றுக் கூம்புபோல் இருக்கும் காந்த சிகிச்சைக் கருவி அந்தத் திறப்பின் கீழ் இருக்கும்.

சிகிச்சை கருவி இயங்கும்போது தலைமுடியை உலர்த்தும் சாதனத்தைப்போல் காந்த அதிர்வுகள் ஏற்பட்டு மார்பகப் புற்றுநோய்க் கட்டிக்குள் செல்லும். அவை புற்றுநோய் உயிரணுக்களைத் தாக்கி கொன்றுவிடும்.

தேசிய பல்கலைக்கழகப் புற்றுநோய்ப் பயிலகத்துடன் சேர்ந்து இந்த ஆண்டின் இரண்டாவது பாதியில், ஓராண்டு பரிசோதனையைத் தொடங்க இந்த ஆய்வுக் குழு திட்டமிடுகிறது. புதிய சிகிச்சை கருவி எந்த அளவுக்குப் பாதுகாப்பானதாக இருக்கும் என்பது இதன் மூலம் தெரியவரும்.

இந்தப் பரிசோதனையில் கிட்டத்தட்ட 30 மார்பகப் புற்றுநோய் நோயாளிகள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.



மூத்த ஆய்வாளர் அலெக்ஸ் டாய் (இடது), இணைப் பேராசிரியர் ஆல்ஃபிரிடோ பிராங்கோ-ஓப்ரிகான் இருவரும் காந்த சிகிச்சை கருவியைப் பரிசோதித்துக் காட்டுகிறார்கள்.
**படம்: சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd.
Permission required for reproduction